## 5.4 மெய்யானச் சமாதானம்

**வேத வசனம்:** இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடுதியாய் அவர்கள்மேல் வரும். அவர்கள் தப்பிப்போவதில்லை. 1 தெசலோனிக்கேயர் 5:2-3

**அறிக்கை:** என்னுடைய சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன் என்று கர்த்தராகிய இயேசு சொன்னார்

**சத்தியம்:** இந்த உலகத்தின் காரியங்களால் உண்மையானச் சமாதானத்தைக் கொடுக்க இயலாது. கர்த்தராகிய இயேசுவே உண்மையான சமாதானத்தைத் தேவையான அளவு கொடுக்க இயலும்.

**வேதப்பகுதி**
மத்தேயு 8:23-27

### பாடக்குறிப்புகள்

- **கர்த்தர் மேல் தொடர்ந்து நம்பிக்கையை வைப்பவர்** - *மத்.8:23-27 ஏசா.26:3,4*
- **ஜெபத்தில் எல்லாவற்றையும் கர்த்தரிடத்தில் ஒப்புவிப்பவர்** - *பிலி.4:6,7*
- **தேவனுடைய இராஜ்யத்தின் சித்தத்தைச் செய்பவர்** - *மத்.6:33 சங்.139:2,5 சங்.122:6*
- **கர்த்தரே சமாதானக் காரணர்** - *யோவா. 17:15*

### ஆர்வமூட்டும் வினாக்கள்
(ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கேள்விகளை விவாதிக்கலாம்)

- தற்காலிக சமாதானத்திற்கும் நிலையான சமாதானத்திற்கும் உள்ள வித்தியாசத்தை உன்னால் கூற முடியுமா?
- மெய்யான சமாதானம் எங்கிருந்து வருகிறது? யோவான். 14:27
- தேவ சமாதானத்தை எப்படி அனுபவிக்கலாம்? ஏசாயா 26:3

### வெறுமையானச் சமாதானம்

அநேகர் தீயப்பழக்கங்கள் மூலம் சமாதானத்தைப் பெற முயற்சிக்கின்றனர். ஆனால் உண்மையில் தேவனைத் தவிர வேறெதுவும் நிலைத்திருக்காது. கடைசி நாட்களில் பூமியதிர்ச்சிகள் போன்ற உபத்திரவங்கள் பெருகும் என்று வேதம் தீர்க்கதரிசனமாக உரைத்துள்ளது. ஒருவராலும் இதனைத் தவிர்க்க முடியாது. பேராபத்துகளும் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாத இன்னல் களும் பூமியில் பெருகும். தேவனால் மட்டுமே உண்மையான நிலையானச் சமாதானத்தைத் தர முடியும். தம்மிடத்தில் கேட்கிற ஒவ்வொருவருக்கும் அதனை அவர் தருகிறார். உனக்கு இந்த சமாதானத்தைக் குறித்துத் தெரியுமா? இந்தச் சமாதானத்தை உன்னில் பெற்றிருக்கிறாயா?

### சிந்திக்க:

தேவனுடைய மெய்யானச் சமாதானத்தைக் காட்ட உன்னால் முடியுமா?

____________________

____________________

### ஜெபம்:

தேவனிடமிருந்து மட்டுமே கிடைக்கும் மெய்யான சமாதானத்தைப் பெற்றுக்கொள்ள தேவன் உன் இருதயத்தைத் திறக்கும்படியான ஒரு ஜெபத்தை எழுது.

____________________

____________________

### செயல்

கர்த்தருடைய சமாதானம் எப்போதும் கிடைக்கும். உன் கவலைகளை விட்டுவிட்டு இயேசு சிலுவையில் ஜீவனைக்கொடுத்து உனக்காகச் சம்பாதித்து வைத்திருக்கும் சமாதானத்தை ஜெபித்து பெற்றுக்கொள்.